**அனுப்புநர்**

தண்.வசுந்தராதேவி,
எம்.ஏ., எம்.எட்.,எம்.ஃபில்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண்.246301/பி1/2019** **நாள் : 24.05.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6–மார்ச் 2019 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தவர்களுள் மதிப்பெண்ணில் மாற்றம் உள்ள தேர்வர்களின் பதிவெண்கள் விவரம் வெளியிடல் குறித்த பத்திரிக்கைச் செய்தி – தொடர்பாக

-----

மார்ச் 2019 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தவர்களில் மதிப்பெண்களில் மாற்றம் உள்ளவர்களது பதிவெண்கள் வெளியிடல் குறித்த செய்திக்குறிப்பு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனை பொது மக்களும், தேர்வர்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளிதழில் செய்தியாக வெளியிடவும், வானொலி / தொலைக்காட்சியில் ஒலி / ஒளி பரப்பிடவும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இது விளம்பரம் அல்ல எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
**இயக்குநர்**

**இணைப்பு**
செய்திக்குறிப்பு

**நகல்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும்

## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006
## இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு, மார்ச் 2019
## மறுகூட்டல் முடிவுகள் வெளியிடுதல் குறித்த
## செய்திக் குறிப்பு

மார்ச் 2019 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதி, மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தவர்களில் மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது பதிவெண்கள் **பட்டியல் 27.05.2019 (திங்கட்கிழமை) அன்று** வெளியிடப்படும். **scan.tndge.in** என்ற இணையதளத்திற்குள் சென்று **"SSLC MARCH 2019 RETOTAL RESULTS"** என்ற வாசகத்தினை **CLICK** செய்த பின்னர், தோன்றும் பக்கத்தில் மறுகூட்டல் முடிவுகளை தெரிந்து கொள்ளலாம். மதிப்பெண்களில் மாற்றம் உள்ள தேர்வர்களுக்கான தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை மதிப்பெண் மாற்றங்களுடன் **27.05.2019 பிற்பகல் முதல் www.dge.tn.nic.in** என்ற இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மதிப்பெண் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்து இப்பட்டியலில் இடம்பெறாத பதிவெண்களுக்கான விடைத்தாட்களில் மதிப்பெண்களில் எவ்வித மாற்றமும் இல்லை என அறிவிக்கப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

**தேதி: 24.05. 2019**
**இடம்: சென்னை – 600 006.**